2007 ஜனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மற்ற நகரங்களிலும் பெண்களுக்கென்று தனியாகப் பேருந்துகள் விடப்படுமா என்று கேட்கிறார். இந்தியாவிலேயே பெண்களுக்கென்று 33 சதவீதத்தை நிர்ப்பந்தப்படுத்தி, அது இங்கு வரவேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் வருகின்ற பிப்ரவரி 10ஆம் தேதி, அதற்கென்று மகளிருடைய ஊர்வலத்தை நடத்தி வைக்கிறார். அவருடைய ஆட்சியிலே நிச்சயமாக அனைத்து நகரங்களிலும் தேவையான அளவிலே பெண்களுக்கென்று பேருந்துகள் விடப்படும். பெண்கள் ஓட்டக்கூடிய அளவிற்கு அவர்களுடைய உடல்நிலை சரியாக இருக்குமானால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

15—

இலவசத் தடுப்பூசி

***880—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அனைத்துக் குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை நோய்க்கு இலவசமாகத் தடுப்பூசி போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில், மஞ்சள் காமாலை நோயைத் தடுக்கும் பொருட்டு, சென்னை, மதுரை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் உதகமண்டலம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் "Hepatitis B" தடுப்பூசி, ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குப் பரீட்சார்த்த முறையில் தற்பொழுது இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை, மத்திய அரசின் உதவியோடு, தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானதாஸ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குழந்தைகளுக்கு மட்டும் அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை, இப்போது பரீட்சார்த்தமாக சில மருத்துவமனைகளிலே நடைமுறைப்படுத்துவதாக அறிவித்தார்கள். இது எல்லா இடங்களிலும் மிகமிகத் தேவைப்படுகிற அவசியமான ஒரு திட்டமாகும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எல்லா தாலுகா மருத்துவமனைகளிலும், அதேபோல—Primary Health Centre—ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் என, இப்படி எல்லோருக்கும் இப்படிப்பட்ட வசதியை விரிவுபடுத்தி, குழந்தைகளை மட்டுமல்ல; பெரியவர்களையும் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா எனத் தங்கள்வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பரீட்சார்த்தமாக நடத்தப்பட்ட 5 மாவட்டங்களைத் தாண்டி, வரும் நிதியாண்டிலே அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ள, தமிழ்நாடு முழுவதுமாக இருக்கிற அத்துணை மருத்துவமனைகளிலும் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்காக, வருகிற 25–1–2007 ஆம் தேதியன்று, முதற்கட்டமாக அதிகாரிகளோடு கூட்டம் நடக்க இருக்கிறது. இது மத்திய அரசாங்கத்தின் உதவியோடு நடக்கிற திட்டம். வரும் நிதியாண்டிலே இது முழுவதுமாக தமிழ்நாட்டிலே செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் பெரியசாமி.

திரு. அன்பில் பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான திருச்சியில் உள்ள அரசு மருத்துவமனையில் நீண்டகாலமாக, Dean பதவியில் பொறுப்பு அலுவலர்களே இருக்கிறார்கள். அதேபோல, மருத்துவக் கல்லூரியிலும் Dean பதவியில் பொறுப்பு அலுவலர்களே இருக்கிறார்கள். Dean பதவியில் நிரந்தரமாக அலுவலர்களைப் போடுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2007 ஜனவரி 23]

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய நாட்களில், ஓரிரு நாட்களில் அந்த Dean பதவியில் அலுவலர்களைப் போடுவதற்கு வேண்டிய முயற்சியை அரசாங்கம் எடுத்திருக்கிறது. அங்கே Dean போடுவதிலே பிரச்சினை என்னவென்றால், Clinical, Non–Clinical என்று சொல்லி, இரண்டு பிரிவு டாக்டர்களும் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். அதை ஓரளவிற்கு அதிகாரிகளை வைத்துப் பேசி முடித்திருக்கிறோம். அவர்களை அழைத்துப் பேசி முடிக்காமல்விட்டால், ஒவ்வொருவரும் கோர்ட்டுக்குப் போய், தடையாணை வாங்கிவிடுவார்கள். ஆகவே, அதையெல்லாம் பேசி முடித்துவிட்டோம். எனவே, குறுகிய காலத்திற்குள்ளாக அந்த Dean பதவி எல்லா இடங்களிலும் நிரப்பப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

திருப்பணி

***8939—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி வேலூர் காவிரிக்கரையிலுள்ள பழமைவாய்ந்த காசி விஸ்வநாதர் ஆலயத் திருப்பணியை நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பரமத்தி வேலூர் காவிரிக்கரையில் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கான திருப்பணி வேலைகள் துவங்கப்பட்டு, மடைப்பள்ளியினைச் சீரமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. அருள்மிகு சுப்பிரமணியர், விநாயகர் மற்றும் சண்டிகேஸ்வரர் சன்னதிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. காசி விஸ்வநாதர் மற்றும் அம்மன் சன்னதிகளைக் கட்டுகின்ற பணி, தொடர் நடவடிக்கையில் உள்ளது. இத்திருக்கோயிலின் திருப்பணிகள் அனைத்தும்